**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.65/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | வினோத் | Prosecution | LW-7 as PW-2 |
| Father Name | கிட்டு | Defence | |
| Village | செம்பதனிருப்பு | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 31/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha , Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **04.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 01.04.2022 ம் தேதி சுமார் 2.00 மணிக்கு மேல் நான் சீர்காழியில் இருந்து செம்பதனிருப்பு நோக்கி எனது TATA Aceயில் வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அண்ணன்பெருமாள் கோயில் பேருந்து நிறுத்தம் அருகில் நான் சென்று கொண்டிருந்த அதே திசையில் அரசு பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகி நின்று கொண்டிருந்தது. எனது வாகனத்திற்கு முன்னால் ஒரு காரும், ஒரு இருசக்கர வாகனமும் இருந்தது. நான் சாலையில் போக்குவரத்து தடை பட்ட காரணத்தால் கீழே இறங்கி சென்று என்ன என்று பார்த்தேன். விபத்தில் அடிபட்ட ஸ்பிளன்டர் பிளஸ் இருசக்கர வாகனம் எனக்கு தெரிந்தவருடையது ஆகும். ஆகவே நான் அந் த வாகனத்தின் உரிமையாளர் ராம்குமார் என்பவருக்கு தொலைபேசி மூலமாக அது பற்றி தகவல் கொடுத்தேன்.

நான் இறங்கி சென்று பார்த்த போது அரசு பேருந்தின் முன்பக்கம் ஓட்டுநர் இருக்கைக்கு கீழ் சேதமடைந்து இருந்தது. எனக்கு வலது பக்கம் அடிபட்டு இறந்து போன நபர் கீழே கிடந்தார். இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட பேருந்தை ஓட்டியவர் ஆஜர் எதிரிதான். ( சாட்சி எதிரியை சுட்டி அடையாளம் காட்டினார். ) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் தாரர் ராம் குமார் என் ஊர்காரர் என்றால் சரிதான். புகார்தாரர்ர வாழையிலை வியாபாரம் செய்கிறார் என்றால் சரிதான். புகார்தாரருடைய வாழையிலைகளை எனது வாகனத்தில் ஏற்றி செல்வேன் என்றாலும் சரிதான் . புகார் தாரர் ராம்குமாரும் நானும் தொழீல் காரணமாக பல காலம் தொடர்புடையவர்கள் என்றால்சரிதான்.விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை தென்னலக்குடியிலிருந்து அண்ணன்பெருமாள் கோயில் வரை மூன்று பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். அந்த 3 பேருந்து நிறுத்தமும் 500 மீ தொலைவு இடைவெளியில் உள்ளது என்றால் சரிதான்.

அரசுப்பேருந்தும் மேற்படி நிறுத்தத்தில் நின்று பயணிகளை இறக்கி விட்டு தான் செல்லும் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் பயணிகளை இறக்கிவிட்டு தான் சென்றது என்றால் சரிதான். அண்ணன்பெருமாள் கோயிலிருந்து செம்பதனிருப்பு போகும் வழியில் ஒரு வளைவு உள்ளது என்றால் சரிதான். செம்பதனிருப்பிலிருந்து அண்ணன் கோயில் வரும் வளைவில் எதிரே வரும் வாகனம் தெரியாது என்றால் சரிதான். அதனால் செம்பத்னிருப்பில் இருந்து அண்ணன்கோயில் வருவோர் அந்த வளைவில் கவனமாக வர வேண்டும் என்றால் சரிதான். இந்த விபத்தில் இறந்ததாக கூறப்படும் நபர்கள் இருசக்கர வாகனத்தில் எதற்காக வந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

அந்த விபத்தில் இறந்த நபர்கள் பற்றிய விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கூட்டமாக இருந்ததை சென்றுபார்த்த போது அங்கு கிடந்த இருசக்கர வாகனத்தை பார்த்து வாகனத்தை அடையாளம் பார்த்து வாகனத்தின் உரிமையாளருக்கு போன் செய்து விபரம் சொன்னேன். அதன் பிறகு அடிபட்ட நபர் மருத்து மனைக்கு சென்றாறா வாகனத்தின் உரிமையாளர் சம்பவ இடத்திற்கு வந்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அங்கிருந்து எனது TATA Ace யில் எனது ஊருக்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் போன் செய்து என்னை வரச்சொன்னார்கள். நான் அண்ணன்கோயில் சென்றேன்.

அப்போது என்னை போலிசார் விசாரித்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலையானது தேசிய நெடுஞ்சாலை என்பதால் லாரிகள், பஸ் அதிகமாக செல்லக்கூடிய இடம் என்றால் சரிதான்.

அந்த விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் நபர்கள் மது அருந்திவிட்டு இரு சக்கர வாகனத்தில் முன்னால் சென்ற லாரியை முந்தி செல்ல முற்பட்ட போது எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமல் பதட்டத்தில் அவர்களாகவே மது போதையில் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.65/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராம்குமார் | Prosecution | LW–1 as PW1 |
| Father Name | கணபதி | Defence | |
| Village | அல்லிவிளாகம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 46/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha , Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **04.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 01.04.2022 ம் தேதி மதியம் 2.30 மணியளவில் நான் செம்பதனிருப்பில் விவசாய வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது எனது நண்பர் வினோத் என்பவர் தொலைபேசி மூலம் என்னை தொடர்பு கொண்டு உங்களுடன் வேலை செய்த பாஸ்கர், மற்றும் மற்றொருவரும் அண்ணன் பெருமாள் கோயில் அருகில் நடந்த விபத்தில் அரசு பேருந்து மோதி இறந்து கிடப்பதாக தகவல் கூறினார். தகவல் கிடைத்ததும் நான் உடனடியாக விபத்து நடந்த இடத்திற்கு எனது இருசக்கர வாகனத்தில் வந்து சேர்ந்தேன்.

விபத்து நடந்த இடத்தில் பாஸ்கர் என்பவருக்கு நெஞ்சு பிளந்து கிடந்து இறந்து விட்டார். மற்றொரு நபர் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தார். நான் சம்பவ இடத்திற்கு வருவதற்குள் அந்த நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைகாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். ஒரு 10 நிமிடம் கழித்து பாஸ்கர் என்பவரையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் சீர்காழி GH க்கு கொண்டு சென்றனர். விபத்து நடந்த இடத்தை பார்த்த உடன் எனக்கு மயக்கம் வந்துவிட்டது. அதன் பின் நானும் ஊர்காரர்களும் காவல் நிலையம் சென்று விபத்து நடந்தது தொடர்பாக புகார் கொடுத்தோம். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம்

என்னுடையது தான் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். **அந்த புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் நபர்கள் என்னிடம் வேலை செய்பவர்களா என்றால் வேலைக்கு அழைத்தால் வேலைக்கு வருவார்கள். எனக்கு என்னக்கி வேலை இருக்கிறதோ அப்போது வேலைக்கு அழைத்து வேலை முடிந்த பிறகு சமபளத்தை அனுப்பி விடுவேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்நாளன்ற இந்த விபத்தில் இறந்த நபர்கள் அன்றைய தினம் எனது வேலைக்காக வேலைக்கு அமர்த்தியிருந்தேன். இந்த விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் நபர்கள் சீர்காழி செல்வதாக என்னிடம் சொன்னார்கள் என்றால் சாப்பிட சென்று வருவதாக கூறினார்கள். என்னுடைய இருசக்கர வாகனம் பழுதடைந்த கிடந்த வண்டியை அந்த இருசக்கர வானததை என்னிடம் சொல்லாமலேயே இந்த விபத்தில் இறந்த நபர்கள் எடுத்து சென்று விட்டார்கள்.

அந்த இருசக்கர வாகனம் பழுதடைந்து கிடந்ததால் நானே அதை பயன்படுத்தாமல் நிறுத்தி வைத்திருந்தேன். எத்தனை மணிக்கு சாப்பிட சென்றார்கள் எத்தனை மணிக்கு விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திறகு சென்றார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்மவ இடத்திற்கு சென்ற உடனே இறந்த நபரின் குடும்பத்திற்கு தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். அவர்கள் உடனே காவல் நிலையத்திற்கு வந்துவிட்டார்கள். அவர்கள் புகார் கொடுத்தார்கள் என்றால் அவர்களும் புகார் கொடுத்தார்கள் நானும் புகார்கொடுத்ததார்கள். என்னிடம் காட்டப்படும் புகார மனுவில் யார் எழுதி கையொப்படம் வாங்கினார்கள் என்றால் காவல் நிலையத்தில் உள்ள போலிசார் ஆனால் அவரின் பெயர் தெரியாது.

என்னிம் வாங்கியது போல் இந்த நபர்களிடமும் எழுதி கையொபப்ம் வாங்கி கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவின் எ்னன விபரம் எழுதப்பட்டுள்ளது என்ற விவபரம் எனக்கு தெரியாது. எத்தனை கையெழுத்து

வாங்கிக்கொண்டார்கள் என்றால் 2 ஆ 3 ஆ என்றுசரியாக ஞாபகம் இல்லை. இற்ந்தவர்களுக்காக நஷ்ட ஈடு கேட்டு வழக்கு போட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலிசார் சம்பவம் நடந்த தினத்தன்று விசாரித்தார்கள். அதன் பிறகு விசாரிக்கவில்லை.

அந்த விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் நபர்கள் மது அருந்திவிட்டு இரு சக்கர வாகனத்தில் முன்னால் சென்ற லாரியை முந்தி செல்ல முற்பட்ட போது எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமல் பதட்டத்தில் அவர்களாகவே மது போதையில் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**